2005 மார்ச் 28]

அரசிடம் அனுமதி பெற்று, இதற்கு வேண்டிய நிதியாதாரத்தைத் தேடி தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

212—

குடியிருப்புகள்

***70083—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11–வது வட்டத்தில் உள்ள பாரதி நகரில் மேலும் 108 குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11–வது வட்டத்தில் உள்ள பாரதி நகரில் 108 குடியிருப்புகள் கட்டுவதற்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின்மூலம் 14–3–2000 அன்று வரைபட ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளபடி பாரதி நகர்த் திட்டத்தில் மேற்கொண்டு குடியிருப்புகளைக் கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு விரைவான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நகர்த் திட்டப் பகுதியில் 1995 ஆம் ஆண்டு இந்தக் குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 11–6–2003 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 27–11–2004 அன்று அம்மா அவர்களின் பொற்கரங்களால் அந்தப் பகுதி திறந்து வைக்கப்பட்டது. கடந்த 16–12–2004 அன்று திடீரென்று சி.பி. ரோடு பகுதியிலே இருக்கின்ற இரயில்வே இருப்புப் பாதையின் ஓரமாக வசிக்கின்ற மக்களை, இரயில்வே நிர்வாகம் காலி செய்ய உத்தரவிட்டபோது, பின்னால் வருகின்றவற்றை முன்கூட்டியே அறிந்து செயல்படுகின்ற அரசாக உள்ள புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் தீர்க்கதரிசனத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தப் பகுதி மக்கள் அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட*

வேண்டிய சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்களுடைய குடியிருப்புகளை அந்தப் பகுதியிலேயிருந்து காலி செய்து, கட்டி முடிக்கப்பட்டு அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டிருந்த அந்த பாரதி நகர்க் குடியிருப்புப் பகுதியிலேயே அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், இப்போதும் நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைவாசிகள், ஏழை எளிய மக்கள் அந்த இரயில்வே இருப்புப் பாதைப் பகுதியிலேயே குடியிருக்கின்றார்கள். இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்கள் இந்த 108 குடியிருப்புகள் கட்டுவதற்கு ஆணை வழங்கியிருக்கின்றார்கள் என்பதை அறிவித்தார்கள். இப்படி கட்டப்படுகின்ற இந்தக் குடியிருப்புகள் அந்த இரயில்வே இருப்புப் பாதைப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுக்கு ஒதுக்கித்தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்களுக்குப் பயன்படும் இந்தக் குடியிருப்புகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின்மூலம் விரைந்து கட்டி முடிப்பதற்கு, ஏழைகளின் ஒளிவிளக்காக விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், ஏறக்குறைய 1 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலே விரைவிலே கட்டி முடிப்பதற்கான ஆணைகளை வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற ஒதுக்கீடுகளை அரசு செய்யுமா என்ற கேள்வியை இங்கே தொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கருத்தினைப் பெற்று மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்பிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இரயில்வே இருப்புப் பாதை மற்றும் கால்வாய்கள் ஓரம், ஆட்சேபகரமான பகுதிகளில் குடியிருக்கின்ற மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன? தற்போது எத்தனை வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2005 மார்ச் 28]

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளிலே ஆட்சேபகரமான பகுதிகளான நதிக் கரைகள், சாலையின் மருங்குகள் மற்றும் பொது நலத் திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிலங்களில் வாழ்ந்து வரும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு மாற்று இடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் தனி வீடுகள் அமைத்தும் மறுகுடியமர்வு செய்ய குடிசைவாழ் மக்களின் நலனிலே பெரிதும் அக்கறைகொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் பேரில், வியாசர்பாடி மகாகவி பாரதி நகரிலே 48 வீடுகளும், செம்மஞ்சேரியில் 88 வீடுகளும், அம்பத்தூர் காமராஜர் நகரில் 144 வீடுகளும், தாம்பரம், பீர்க்கன்கரணையில் 198 வீடுகளும், சென்னை, எண்ணூர் தாழங்குப்பம் பகுதியிலே 468 வீடுகளும், சென்னை, இராயபுரத்திலே 552 வீடுகளும், சென்னைப் பெருநகர உள்கட்டமைப்புத் திட்டத்தின்கீழ், சென்னை, செம்மஞ்சேரிப் பகுதியிலே 1,512 வீடுகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் 2,538 வீடுகளும், சென்னை, செம்மஞ்சேரியில் 5,164 குடியிருப்புகளும், ஆகமொத்தம், 10,712 குடியிருப்புகள் ஏறக்குறைய 131 கோடியே 82 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிமுடித்தும், கட்டப்பட்டும் வருகின்றன என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 213, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

213—

ஆசிரியர் காலிப் பணியிடங்கள்

***71185—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள அரசுக் கலைக் கல்லூரிகளிலும், உதவிபெறும் கல்லூரிகளிலும் காலியாகவுள்ள ஆசிரியர் பணியிடங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள 67 அரசுக் கலைக் கல்லூரிகளில் 1,504 விரிவுரையாளர்களும்,